நாளை காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டம்: புதிய தலைவர் குறித்து ஆலோசனையா?

டெல்லி, ஜன. 21–

நாளை நடைபெறும் காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் உட்கட்சித் தேர்தல் தொடர்பாக விவாதிக்கப்பட உள்ளது.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் அதன் இடைக்கால தலைவர் சோனியா காந்தி தலைமையில் இணைய வழியாக நாளை கூடுகிறது. அதில், மிக முக்கியமாக உட்கட்சி அமைப்புத் தேர்தல் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. வேளாண் சட்டங்களுக்கு எதிரான விவசாயிகளின் போராட்டம், பட்ஜெட் கூட்டத் தொடரில் எழுப்ப வேண்டிய விஷயங்கள் குறித்தும் ஆலோசனை நடைபெறுகிறது.

முன்னதாக சோனியா காந்திக்கு, குலாம் நபி ஆசாத், கபில் சிபல், ஆனந்த சர்மா உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியின் 23 மூத்த தலைவர்கள் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் எழுதிய கடிதம் விவாதங்களை உண்டாக்கியது. தேர்தல்களில் ஏற்பட்ட தொடர் தோல்விகளை அடுத்து, கட்சியை மறுசீரமைப்பு செய்ய வேண்டும், முழு நேர தலைவரை நியமிக்க வேண்டுமென அவர்கள் வலியுறுத்தி இருந்தனர்.

இதனையடுத்து, காங்கிரஸ் உட்கட்சித் தேர்தலை நடத்துவதற்காக, மதுசூதனன் மிஸ்திரி தலைமையில் 5 பேர் கொண்ட குழுவை அமைத்தார் சோனியா காந்தி. இந்தக் குழுவானது தற்காலிக தேர்தல் அட்டவணை தயாரித்து, காரியக் கமிட்டியின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. நாளை நடைபெறும் கூட்டத்தில் தேர்தல் அட்டவணை இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதுபோலவே புதிய காங்கிரஸ் தலைவர் குறித்தும் விவாதிக்கப்பட இருக்கிறது. மக்களவைத் தேர்தல் தோல்வியை அடுத்து காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார் ராகுல் காந்தி. இதனால் 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடைக்கால தலைவராக சோனியா காந்தி நியமிக்கப்பட்டார். மீண்டும் தலைவராகராகுல்காந்திபொறுப்பேற்க வலியுறுத்தப்பட்டபோதிலும் அவர் மறுத்துவிட்டார்.

இந்த நிலையில் நாளை நடைபெறும் காரியக் கமிட்டி கூட்டத்தில் புதிய தலைவர் தேர்தலுக்கான சில பரிந்துரைகளையும் மதுசூதனன் மிஸ்திரி அளிக்க இருப்பதாகவும், தேர்தல் தேதியும் முடிவெடுக்கப்படும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

நெசப்பாக்கத்துக்கு பதில் ஏவிஎம், சைதாப்பேட்டை மயானபூமி

சென்னை, ஜன.21–

சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம்மண்டலம், நெசப்பாக்கம் மயானபூமியில்எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளதால், அதனை சீர்செய்யும் பொருட்டு நாளை (22–ந் தேதி)முதல் பிப்ரவரி 12–ந் தேதி வரை இந்த மயானபூமி இயங்காது.

மேலும், பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள ஏ.வி.எம். அல்லது சைதாப்பேட்டை மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளனர்.

தென்சென்னை வடக்கு கிழக்கு மாவட்ட நிர்வாகிகள்: எடப்பாடி – ஓ.பி.எஸ். அறிவிப்பு

சென்னை, ஜன.21–

தென்சென்னை வடக்கு கிழக்கு மாவட்டத்திற்கு புதிய பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்களை நியமித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியும், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும் அறிவித்து இருக்கிறார்கள்.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

ஆயிரம்விளக்கு வடக்கு பகுதி கழக செயலாளராக நுங்கை எஸ். செல்வகுமார், ஆயிரம்விளக்கு தெற்கு பகுதி செயலாளராக பாசறை எம்.பாலச்சந்திரன், சேப்பாக்கம் வடக்கு பகுதி செயலாளராக எம். கே.சிவா, சேப்பாக்கம் தெற்கு பகுதி கழக செயலாளராக வி.முருகன், திருவல்லிக்கேணி கிழக்கு பகுதி செயலாளராக எம்.ஜி.ஆர். வாசன் என்கிற பி.எஸ்.வாசன், திருவல்லிக்கேணி மேற்கு பகுதி செயலாளராக பி.வி. சீனிவாசன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஆயிரம்விளக்கு வடக்கு பகுதி எம்.ஜி.ஆர். மன்ற துணை செயலாளராக தேனை எம்.ரமேஷ், சேப்பாக்கம் தெற்கு பகுதி எம். ஜி.ஆர். மன்ற செயலாளராக ஹவுசிங் போர்டு எம்.பாபு ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட்ட செயலாளர்கள்

ஆயிரம்விளக்கு வடக்கு பகுதி வட்ட செயலாளர்களாக கே.பி. கபிலன், எம்.சேகர், பி.ராஜேஷ், சாலை எம்.உமாபதி, டி.வினாயகமூர்த்தி, பொன். செ.குமார், எம்.சுரேஷ்,

சேப்பாக்கம் தெற்கு பகுதி கழக செயலாளர் வி.முருகன்

ஆயிரம்விளக்கு தெற்கு பகுதி வட்ட செயலாளர்களாக பி.சின்னையன் என்ற ஆறுமுகம், பி.இளையமாறன், பி.சின்னையா

சேப்பாக்கம் வடக்கு பகுதி கழக வட்ட செயலாளர்களாக கே.இளங்கோ, பி.தட்சிணாமூர்த்தி, ஆர். காமேஷ், சி.எஸ். ஆனந்தன், ஜி.சந்திரபாபு,

சேப்பாக்கம் தெற்கு பகுதி கழக வட்ட செயலாளர்களாக கோழி கே.மோகன், என்.எம்.சாதிக் பாஷா, வி.மனோஜ்குமார், டி.ஜெயராமன், ஏ.சிவசங்கர், திருவல்லிக்கேணி கிழக்கு பகுதி வட்ட செயலாளர்களாக டி.சுந்தரமூர்த்தி, ஆர்.செல்வம், எம். வின்சென்ட் ராஜ், ஜே.ஆர்.ஸ்ரீகபாலி, கீரை எம்.குமார்,

திருவல்லிக்கேணி மேற்கு பகுதி வட்ட செயலாளர்களாக பி.ராஜா, பார்த்தாஸ் கே.கிருஷ்ணமூர்த்தி, எஸ். ஜனார்த்தனன், கலைபாபு, ராமமோகன்துரை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தென்சென்னை வடக்கு கிழக்கு மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளராக அபிஷேக் ரங்கசாமி, துணை செயலாளராக வரதை எம்.முத்துபரணி, மகளிர் அணி மாவட்ட தலைவராக டி.வளர்மதி, ஜி.கலைச்செல்வி, மாவட்ட மாணவர் அணி செயலாளராக என்.சுனில், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளராக 'எல்ஐசி' டி.ஜெயச்சந்திரன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளராக ஏ.அருள்தாஸ், மாவட்ட இலக்கிய அணி செயலாளராக வி.ராஜ்குமார், பாசறை மாவட்ட செயலாளராக சி.மணிகண்டன், மாவட்ட தொழில்பிரிவு செயலாளராக டி.லட்சுமி நாராயணன், வர்த்தக அணி செயலாளராக ஜி.சங்கர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாநில எம்.ஜி.ஆர். மன்ற நிர்வாகிகள் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர்களாக தூத்துக்குடி பி.ஏ.ஆறுமுக நயினார், முன்னாள் எம்.எல்.ஏ. ஆர்.சீனிவாசன், துணை செயலாளர்களாக வேலூர் எல்.கே.எம்.பி. வாசு ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கூறியுள்ளனர்.

தமிழ்நாட்டில் சாதிவாரியாக புள்ளி விபரம் சேகரிக்கும் ஆணையம்: நீதிபதி ஏ.குலசேகரன் தலைவர்

சென்னை, ஜன.21–

தமிழக அரசின் பல்வேறு நலத்திட்ட பயன்கள் அனைத்து பிரிவினருக்கும் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டி புள்ளி விவரங்களை பெறுவதற்காகவும், தற்போதைய நிலவரப்படி சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளி விபரங்களை சேகரிக்கும் வழிமுறைகளை முடிவு செய்து, அப்புள்ளி விபரங்களைத் திரட்டி அரசுக்கு அறிக்கை அளிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.குலசேகரன் தலைமையில் தமிழ்நாட்டில் சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளி விபரங்களை சேகரிக்கும் ஆணையம் அமைத்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த ஆணையத்தின் அலுவல் சார்ந்த உறுப்பினர்களின் முதல் கூட்டம் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆய்வுக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கே.பணீந்திர ரெட்டி, அரசு முதன்மைச் செயலர் (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை) பி.சந்தரமோகன், பொருளாதாரம் மற்றும் புள்ளியல் துறை ஆணையர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு மின் ஆளுகை முகமை ஆணையர் சந்தோஷ் கே. மிஸ்ரா, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குனர் சி.காமராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் சி.முனியநாதன், ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மா.மதிவாணன், மற்றும் சென்னை மாநகராட்சி, பழங்குடியினர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சி நிர்வாகம், நகர பஞ்சாயத்து, சிறுபான்மையினர் நலத்துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உயிருடன் உள்ளேன்–நான் பேய் இல்லை: இறந்து போனதாக கூறப்பட்ட முதியவர் பேட்டி

லக்னோ, ஜன. 21–

"சார், நான் உயிருடன் தான் இருக்கிறேன், நான் பேய் இல்லை" என்ற போர்டுடன் கலெக்டர் அலுவலகத்தில் முதியவர் ஒருவர் போராட்டம் நடத்திப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

உ.பி மாநிலம் அமோய் கிராமத்தைச் சேர்ந்த 65 வயது முதியவர் போலா சிங். இவரது தந்தை தனது இரண்டு மகன்களுக்கும் தன் சொத்துகளை எழுதி வைத்துள்ளார். இந்நிலையில் போலா சிங் இறந்துவிட்டதாகக் கூறி, போலாசிங்கின் சகோதரர் அந்த இடத்தை மாவட்ட நிர்வாக அதிகாரிகளைக் கொண்டு அதை தன் பெயருக்கு மாற்றிக் கொண்டு விட்டார்.

இந்நிலையில், அமோய் கிராமம் உள்ள மிர்சாப்பூர் கலெக்டர் அலுவலகத்திற்கு முன்பு, 65 வயது முதியவர் ஒருவர், "சார், நான் உயிருடன் தான் இருக்கிறேன். நான் மனிதன் தான் பேய் இல்லை" என ஒரு போர்டை கையில் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தார். அவரின் நூதனமான இந்த போர்டு பலரது கவனத்தை ஈர்த்தது.

கலெக்டர் அலுவலக அதிகாரிகள் அவரிடம் விசாரணை நடத்தியதில், தான் தான் போலா சிங் எனவும், தன் சகோதரர் தன்னை ஏமாற்றி, நான் இறந்துவிட்டதாகக் கூறி தனது இடத்தை அவரது பெயருக்கு மாற்றிக்கொண்டதாகக் குறிப்பிட்டார். ஆனால் போலா சிங் இறந்து போனதற்கான சான்றிதழைக் கொடுத்துத் தான் அவரது சகோதரர் அந்த இடத்தை மாற்றியுள்ளார்.

இதனால் அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. உடனடியாக, போராட்டம்நடத்தியபோலாசிங்என்ற முதியவரை அமோய் கிராமத்திற்கு அழைத்துச் சென்று, அங்குத் தனது வீடு, சகோதரர், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை அடையாளம் காட்டச் சொல்லியுள்ளனர். ஆனால் அந்த முதியவருக்கு யாரையும் அடையாளம் காட்டத் தெரியவில்லை.

தான் இந்த கிராமத்தை விட்டுச் சென்று 20 ஆண்டுகள் ஆகிவிட்டதாகவும், தற்போது யாரையும் அடையாளம் தெரியவில்லை எனவும் குறிப்பிட்டார். அதே போல அந்த கிராமத்தில் உள்ளவர்களுக்கும் இவரையும் அடையாளம் தெரியவில்லை. இதனால் இந்த வழக்குத் தீர்க்க முடியாத பிரச்சனையாக மாறியது.

இதையடுத்து கலெக்டர் தற்போது போலா சிங் எனத் தன்னை சொல்லிக்கொள்ளும் முதியவருக்கும், போலா சிங்கின் சகோதரருக்கும் டிஎன்ஏ பரிசோதனை செய்யச் சொல்லி உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் இவர்களுக்குள் இருக்கும் உறவு அறிவியல் பூர்வமாகத் தெரிந்துவிடும் என்பதால் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

4 வது நாளாக தங்கம் விலை உயர்வு: இன்று சவரனுக்கு ரூ. 320 அதிகரிப்பு

சென்னை, ஜன. 21–

சென்னையில் தங்கம் விலை தொடர்ந்து நான்காவது நாளாக உயர்ந்து, இன்று சவரன் ரூ. 37,528 ஆக அதிகரித்துள்ளது.

சென்னையில் இன்று ஒரு கிராம் (22 கேரட்) ஆபரணத் தங்கத்தின் விலை ரூ.4,691 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நேற்று இதன் விலை 4,651 ரூபாயாக இருந்தது. சரவன் ரூ.37,208 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இன்று ஆபரண தங்கத்தின் விலை கிராமுக்கு 40 ரூபாய் உயர்ந்துள்ளது. அதன்படி, 8 கிராம் ஆபரணத் தங்கம் இன்று 320 ரூபாய் உயர்ந்து 37,528 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

தூய தங்கம்

ஆபரணத் தங்கத்தைப் போலவே தூய தங்கத்தின் விலையும் இன்று உயர்த்தப்பட்டுள்ளது. 24 கேரட் தூய தங்கத்தின் விலை (ஒரு கிராம்) நேற்று ரூ.5,035லிருந்து இன்று ரூ.5,075 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல, 8 கிராம் தூய தங்கம் நேற்று 40,280 ரூபாய்க்கு விற்பனையான நிலையில், இன்று 320 ரூபாய் உயர்ந்து 40,600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை

வெள்ளி விலையும் இன்று உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் ஒரு கிராம் வெள்ளி நேற்று ரூ.71.30க்கு விற்பனை செய்யப்பட்டது. இன்று அதன் விலை ரூ.72.50 ஆக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ வெள்ளி 72,500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அந்தியூர் அருகே கார் – மோட்டார் சைக்கிள் மோதல்: சோளத்தட்டு வியாபாரிகள் 2 பேர் பலி

அந்தியூர், ஜன. 21–

அந்தியூர் அருகே கார் – மோட்டார் சைக்கிள் நேருக்நேர் மோதிய விபத்தில் சோளத்தட்டு வியாபாரிகள் 2 பேர் பலியானார்கள்.

சத்தியமங்கலம், கெம்பநாயக்கன்பாளையம் அம்மன் நகர் முதல் வீதியைச் சேர்ந்தவர் கோவிந்தன் மகன் செல்வன் (58). அதே பகுதியில் உள்ள சாவடி வீதியைச் சேர்ந்தவர் முருகேசன் மகன் ராஜன் (42). சோளத்தட்டு வியாபாரிகளான இருவரும் நேற்றிரவு அத்தாணியிலிருந்து அந்தியூருக்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர். கம்மங்காடு அருமலை கவுண்டர் தோட்டம் அருகே சென்றபோது எதிரில் வந்த காரும், இருசக்கர வாகனமும் எதிர்பாராமல் நேருக்கு நேர் மோதிக் கொண்டது. இதில் பலத்த காயமடைந்த இருவரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் அங்கு மருத்துவர்கள் பரிசோதித்தபோது ஏற்கனவே உயிரிழந்தது தெரியவந்தது. இதுகுறித்து ஆப்பக்கூடல் போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

அப்பல்லோ சிந்தூரி ஹோட்டல்ஸ் லிமிடெட்
CIN: L72300TN1998PLC041360
பதிவு அலுவலகம் : எண்.43/5, ஹீசைன் மோனஷன், கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006, தொ.பே.:044-49045016
இணையதளம்: www.apollosindoori.com மின்னஞ்சல்: info@apollosindoori.com,

அறிவிப்பு

2012-13 காலத்திற்க்கு தொடர்புடைய ஏழு ஆண்டு ஈவுத்தொகை மற்றும் பங்குகள் IEPF கணக்குக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை நாங்கள் தெரிவிக்க விரும்புகிறோம்.
எந்த ஒரு நபரின் பங்குகள் மற்றும் உரிமை கோரப்படாத ஈவுத்தொகைகள் நிதிக்கு மாற்றப்பட்டால் IEPF படிவம் 5ல் மின்னனு மூலமாக விண்ணப்பம் செய்வதன் மூலம் IEPF குழுமத்திடமிருந்து பங்குகள் / ஈவுத்தொகைகளை கோரலாம். அதற்கான விவரங்கள் www.iepf.gov.in மற்றும் நிறுவனத்தின் www.apollosindoori.com இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.
விதிமுறைகளுக்கு உட்பட்டு பங்குதாரர்களுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் அதனை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான M/s. கேமியோ கார்ப்போரேட் சர்வீஸஸ் லிமிடெட், "சுப்ரமணியன் பில்டிங்" 5வது தளம், எண். 1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை - 600002 மற்றும் நிறுவனத்தின் www.cameoindia.com என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளவும்.
மேற்குறிப்பிட்ட அறிவிப்பு நிறுவனத்தின் www.apollosindoori.com இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

அப்பல்லோ சிந்தூரி ஹோட்டல்ஸ் லிமிடெட்டிற்காக
ரூபாலி ஷர்மா
கம்பெனி செயலாளர்
தேதி: 05.01.2021
இடம்: சென்னை

ரூஃபிட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
(நொடித்தல் மற்றும் திவால் தொகுப்பு, 2016 விதிகளின் கீழ் கலைப்பில் உள்ளது)
காப்பரேட் அலுவலகம் : நியூ பாரத் பில்டிங், கோருபதேவ் குறுக்கு சந்து எண்.1, ரம்பாவ் போக்லே மார்க், பைகுல்லா (கிழக்கு), மும்பை 400 033, மகாராஷ்டிரா, இந்தியா

நொடித்தல் மற்றும் திவால் தொகுப்பு, 2016ன் கீழ் சொத்து மின்னணு ஏலம்
பிணையத் தொகை வைப்பு செலுத்த வேண்டிய கடைசி தேதி : 05 பிப்ரவரி, 2021
ஏலத் தேதி மற்றும் நேரம் : 08 பிப்ரவரி, 2021 அன்று காலை 11.00 மணியிலிருந்து மதியம் 1.00 மணி வரை

நொடித்தல் மற்றும் திவால் தொகுப்பு, 2016 விதிகளின் கீழ் தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், மும்பையால் நியமிக்கப்பட்ட மெசர்ஸ் ரூஃபிட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் (கலைப்பில்) கலைப்பலுவலர் திரு. ஜிதேந்தர் ஜெயின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கீழ்க்கண்ட முத்திரை விற்பனை செய்யப்பட உள்ளது.

விவரங்கள்	படம்	ரிசர்வ் விலை (ரூபாயில்)	பிணையத் தொகை வைப்பு (ரூபாயில்)
முத்திரை சட்டம், 1999 பிரிவு 19ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பதிவு எண்.1775857 மற்றும் புலியுடன் கூடிய "ரூஃபிட்" முத்திரை	Roofit	20,21,250	2,02,125

மேற்கண்ட சொத்து மின்னணு ஏல முறையில் "உள்ளது உள்ளபடி" www.gaplonline.comல் விற்பனை செய்யப்படும். மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: கார்த்தி ஆக்ஷனீர்ஸ் பிரைவேட் லிமிடெட். (தொலைபேசி எண்: 9820106675 மற்றும் மின்னஞ்சல் : office@gaplonline.com

ஒப்பம்/-
ஜிதேந்தர் ஜெயின்
ரூஃபிட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் கலைப்பலுவலர்
பதிவு எண். IBBI/IPA-002/IP-N00033/2016-17/10070

IDFC
ஐடிஎப்சி லிமிடெட்
CIN: L65191TN1997PLC037415 Email: info@idfc.com. Website: www.idfc.com
பதிவு அலுவலகம்: 4வது தளம், கேபிடல் டவர், 555, அண்ணா சாலை, திரு வி க குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை-600 018. தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022
கார்பொரேட் அலுவலகம்: 906/907, 9 வது மாடி, எம்பசி சென்டர், ஜம்னாலால் பஜாஜ் சாலை, நரிமன் பாயிண்ட், மும்பை 400 021 தொலைபேசி :+91 22 4222 2000 தொலைநகல்: +91 22 2654 0354

அறிவிப்பு

2015ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 29 (1) மற்றும் விதி 47 (1) (ஏ) ஆகியவற்றின்படி இதர அலுவல்களுக்கு இடையே டிசம்பர் 31, 2020 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை (தணிக்கையாளர்களின் மறுவரையறுக்கப்பட்ட ஆய்விற்குட்பட்டது) விவாதித்து ஒப்புதல் வழங்க ஐடிஎப்சி லிமிடெட்டின் 143வது இயக்குனர்கள் குழு கூட்டம் **சனிக்கிழமை, பிப்ரவரி 13, 2021** அன்று மும்பையில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த கூட்ட அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.idfc.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com மற்றும் பிஎஸ்சி லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.com ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது.

ஐடிஎப்சி லிமிடெட்டுக்காக
ஒப்பம்/
மகேந்திர என். ஷா
கம்பெனி செயலாளர்
இடம்: மும்பை
தேதி : ஜனவரி 20, 2021

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
CIN: U65191TN1993PLC025280
பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்பென்சர் ப்ளாசா, ஃபேஸ் 2, 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2
தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050
மின் அஞ்சல்: cs@equitasbank.com | www.equitasbank.com

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன், விதி 29 மற்றும் விதி 47ன் படி, டிசம்பர் 31, 2020 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகள் மற்றும் இதர விஷயங்களைப் பரிசீலிக்க, ஜனவரி 28, 2021 வியாழக்கிழமை அன்று வங்கி இயக்குனர்களின் கூட்டம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு, வங்கியின் இணையதளம் www.equitasbank.com மற்றும் பங்குச் சந்தை இணையதளங்களில் www.bseindia.com மற்றும் www.nseindia.com உள்ளது.

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்க்காக
சம்பத்குமார் கே ஆர்,
நிறுவன செயலர்
இடம் : சென்னை
தேதி : ஜனவரி 20, 2021

NIPPO
இந்தோ நேஷனல் லிமிடெட்
CIN: L31909TN1972PLC006196
பதிவு அலுவலகம்: 'லட்சுமி பவன்', 4–வது தளம், எண். 609, மவுண்ட் ரோடு, சென்னை–600 006. Tel: 044 28272711 / 044 28275653
Email ID: jsrinivasan@nippo.in Website : www.nippobatteries.com

அறிவிப்பு

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 (''பட்டியல் ஒழுங்குமுறைகள்'')ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே, 31 டிசம்பர், 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் **வியாழக்கிழமை, 11 பிப்ரவரி, 2021** அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும், கம்பெனியின் இணையதளம் www.nippobatteries.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் இந்த அறிவிப்பு உள்ளது.

இந்தோ நேஷனல் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/- J. ஸ்ரீனிவாசன்
கம்பெனி செயலாளர்
இடம்: சென்னை
தேதி: 20.01.2021

எம்பிஎஸ் லிமிடெட்
CIN: L22122TN1970PLC005795
பதிவு அலுவலகம்: RR டவர்ஸ் IV, 16/17, குப்பர் A, திரு–வி–க இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை–600 032, தமிழ்நாடு
கார்ப்பரேட் அலுவலகம்: C–35, செக்டர்–62, நொய்டா –201307.தொலைபேசி எண்: 0120–4599754.
Email ID: investors@mpslimited.com
Website: www.mpslimited.com

அறிவிப்பு

2015ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 47ன்படி இதர அலுவல்களுக்கு இடையே டிசம்பர் 31, 2020 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) பரிசீலித்து, ஒப்புதல் வழங்க கம்பெனியின் இயக்குனர் குழு கூட்டம் வியாழக்கிழமை, ஜனவரி 28, 2021 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
கம்பெனியின் இணைய தளம் மற்றும் கம்பெனியின் சமபங்குகள் வெளியிடப்படும் ஸ்டாக் எக்சேஞ்சுகள் அதாவது www.mpslimited.com, www.bseindia.com and www.nesindia.comல் இந்த அறிவிப்பு உள்ளது.

எம்பிஎஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
சுனித் மல்ஹோத்ரா
சீஎஃஓ மற்றும் கம்பெனி செயலாளர்
தேதி: ஜனவரி 20, 2021
இடம்: நொய்டா

விழுப்புரம் உதவி சீட்டு பதிவாளர் அவர்களின் நடவடிக்கைகள்.
முன்னிலை
திருமதி பெ. இளங்கிளி அவர்கள் உதவி சீட்டு பதிவாளர் விழுப்புரம்.
மத்தியஸ்தர் வழக்கு எண் 15/2020, நாள் 31 /12/ 2020
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு பிரைவேட் லிமிடெட், விழுப்புரம் ...மனுதாரர்
1.Jayamala w/o. Murugan, 100, tharamarai street, oozhiyar Nagar, kandamanadi, Villupuram.
2. Murugan S/o Raman, 100, tharamarai street, oozhiyar Nagar , kandamanadi, Villupuram.
3. Jayalakshmi, W/o. Kannan, 3/340, Pillaiyar Koil Street, Karuvatchi, Villupuram.
4. parasuraman S/o. Thulisingam, 3/136 A, New Colony Street, Semmar colony, Villupuram.
5. Ruthamoorthy, S/o. Dhandapani, 106, 2/57 Mariamman Koil Street, Lakshmi puram.Villupuram.
..எதிர் மனுதாரர்கள்

மனுதாரருக்கு சேர வேண்டிய நாளது தேதி வரையிலான தொகை ரூ 3,62,171/ நிலுவையாக தங்களிடமிருந்து சேர வேண்டியுள்ளதாக இவ்வலுவலகத்தில் முறையீடு செய்யுப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக விசாரணை இவ்வலுவலகத்தில் 29/1/2021 நாள் காலை 11.00 மணியளவில் நடைபெறவிருக்கிறது. மேற்படி விசாரணையின் போது மனுதாரருக்கு சேர வேண்டிய தொகையினை என் முன்னாள் தாங்கள் செலுத்த வேண்டியது எனவும், இது சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அதை விசாரணையின் போது தெரிவிக்கலாம் எனவும் விசாரணையில் ஆஜராகத் தவறும் பட்சத்தில் இம்மனு மீது ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் எனவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

உதவிச்சீட்டு பதிவாளர்
விழுப்புரம்.

ஸ்ரீ சாந்திநாத் நிதி லிமிடெட்
(மத்திய அரசின் 620A/GSR248/96 அங்கீகாரம் பெற்றது)
பதிவு அலுவலகம்: 719, நேருஜி ரோடு, விழுப்புரம். Ph 222370

தங்க நகை ஏல அறிவிப்பு

கீழ்கண்ட உறுப்பினர்களின் நகைக்கடன்கள் தவணை கடந்தது குறித்து சாதாரண மற்றும் பதிவு அஞ்சலில் அறிவிப்புகள் கொடுத்தும் நகையை மீட்கா